Publishing information

Title

மாயா

உயிர் , ஆண்டவன்அண்டம்

Year of Publication 2017

Generie

Spirituality

Author

N.நடராஜன்

N.Natarajan

Natarajan.naga@gmail.com

முகவுறை

மதமும் அறிவியலும்



இந்து மதத்தில் சொல்லப்பட்டுள்ள பல கதைகளும் செய்திகளும். அறிவியல் செய்திகளே . ஆனால் காலப்போக்கில் அவற்றில் பல , காலத்தால் சிதைந்து செய்திகள் திரிந்து , பல உண்மைகள் மறைந்து , பொது அறிவிற்குச் சற்று புறம்பான கதைகளாக மாறிவிட்டன.

இதற்கு **மாயை** என்னும் ஒரு மாபெரும் சக்தி தொடர்பான நம்பிக்கைகளும் விளக்கங்களும் மாத்திரமே போதுமான சாட்சி சொல்லும்.

மிக சுருக்கமாக ஆன்மிக வாழ்க்கை ஒரு வாழ்க்கைப் பயண்ம்.

கடவுள்– உயிர்கள்–அண்டம் மூன்றும் ஆன்மிகத்தின் அம்சம்கள். ஆன்மிகப்பாதையில் பற்பல வழிகள் இருந்தாலும். சேருமிடம் ஒன்றுதான் . குறிக்கோள் ஒன்றேதான்.

படைப்பின் ரகசியத்தை அறிதல். ஆன்மிகப் பாதையிலே, நம்மைப் படைத்த அந்த **பிரம்மனைக்** கண்டு, கை குலுக்குவது. (இது ஒரு *metaphore* தான்) உண்மையில், **(படைப்பின் ரகசியத்தை அறிவது .தான் ஆன்மிகப் பயணத்தின் குறிக்கோள்)**

படைப்பின் ரகசியத்தை அடைவதற்கு யார் அல்லது எது தடை? **மாயை!**

இப்பொழுது கடவுள் அண் டம் உயிர்கள் இவ்ற்றை அலசி பின்னர் மாயையை விளக்கி விடுவோம்.

முதலில் கடவுள்களைப் பற்றிய ஒரு அலசல்

சிவா அல்லது சிவன் ஒன்றே கடவுள் ; ஒருவனே

தேவன் என்று படித்தும் கேட்டும் வருகிறோம் . எல்லா மதங்களும் அப்படித்தான் சொல்கின்றன . ஆனால் சொல்லும் வார்த்தைகள்தான் வேறுபடுகின்றன.

இந்துக்களின் நம்பிக்கையில் அகில அண்டத்திற்கும் ஒரே ஒரு பெரிய அதிகாரி அவருக்கு மாத்திரம் பிறப்பு–இறப்பு விதியிலிருந்து ஒரு விலக்கு . இந்துக்களுக்கு அவர் **சிவா** அல்லது **சிவன்.**

அவருடைய வீடு எது? எங்கே இருக்கிறார்?

ஞானிகள் சொல்வதை நாம் சரிவர புரிந்து கொண்டால், நாமே அந்த சிவனுக்குள்ளேதான் இருக்கிறோம் என்பது தெளிவாகும்.

மற்ற மதங்களும் குறிப்பிடுவதும் இந்த ஒரே (ஆ)சாமியைத் தான் . ஆனால் கூப்பிடும் பெயர்தான் வேறே.

நாமெல்லாம் ஒரு உடம்பு போர்த்திய **ஸ்பிரிட்** (ஆவிகள்). கடவுள் என்பவர் எல்லோ உயிர்களையும் விட மிகவும் **மேன்மையான ஒரு ஆவி.**

நாம் எல்லோரும் ஆவி போர்த்திய உடம்புதான். உடம்பு அழியும் ஆனால் ஆன்மா அல்லது ஆவிக்கு அழிவேதுமில்லை. ஆவிகளுள் மிகவும் மேன்மையான ஆவி என்பது ஒன்று . அதாவது வேறு எந்த ஆவியையும்விட மிகுந்த கடவுள் என்பவர் , இந்த

அண்டத்திலே மிகவும் **மேன்மை பொருந்திய ஆவி** (Holiest spirit) பொருந்தியவர்

கடவுளைப் பற்றி , வேறு ஒரு மதம் கீழே கண்டவாறு விவரிக்கிறது. எந்த ஒருவர் எந்த ஒரு கடவுளாலும் உருவாக்கப்படவில்லையோ அல்லது யாராலும் படைக்கப் படவில்லையோ, அவர்தான், கடவுள் என்பவர்.

நாம் கூட சாமிதான்.

அஹம் பிரஹ்மாஸ்மி

ஆனால் மற்றவர் அதை உணர்வதற்கு , நம் மனதிலே குவிந்த டன் அளவினாலான அழுக்கை , அதிகம் பாடுபட்டு கழுவி சுத்தம் செய்து கொள்ளணும் . அப்படிப்பட்ட மாமனிதர்களை புத்தர் , யேசு, தீர்க்கதரசியார் வள்ளலார், காஞ்சி மகா பெரியவர் என்ற மாமனிதர்களில் காணலாம். இந்தப் பட்டியல் நீளும்.

பிரம்மா ஒருவரில்லை.

அனேகர். அண்டத்திலுள்ள எல்லோருமே ஏதோ ஒரு பிரமனால் படைக்கப்பட்டவர்கள் என்றே அறிவார்காள் . (சிவன் விஷ்ணு தவிர).

நாமும் எதை எதையோ படைக்கிறோம் . அதனால் நாமும் **பிரம்மாதான்.**

ஒரே ஒரு கடவுள் என்பவர் ஒறே ஒருவர்தான் . அவருக்கு பிறவி-இறப்பு இல்லை. அவருக்கு மாத்திரம் அவரைப் படைத்தவன் என்று ஒருவர் இல்லை.

ம்ற்றவரெல்லாம் தெய்வங்கள் . மனிதரைப் போன்றே பிறப்பு-இறப்பு என்னும் வட்டத்தில் சுற்றிவருவோர்.

ஆனால் அண்டத்தில் ஒரே ஒருவர் மாத்திரம் யாராலும் படைக்கப்படவில்லை. அவர்தான் பெரிய கடவுள் . அவருக்கு கடவுள் (படைத்தவர் எவரும்) இல்லை. பிறப்பு இறப்பு என்ற இரண்டும் இல்லாதவர் . என்கிறது வேறு ஒரு மதம்.

(உண்மையாகவே அப்படி சிவன் என்று ஒருவர் இருக்கிறாரா? கற்பனையா? இந்த சிந்தனையில் கிடைக்கப்போவது ஒன்றுமில்லை . இந்தப் புத்தகம் முழுவதும் படித்து முடியும் வரை சந் தேகத்தை மூட்டை கட்டி வைத்து , செய்திகளை மனதில் தேக்கி வைத்து அலசுங்கள் . கடைசியிலே கடவுள் இருபதையோ மறுப்பதையோ முடிவு செய்துகொள்ளுங்கள்).

அத்தியாயம் 1

நான்காம் பரிமாணம்

உயிர்களும் – ஸ்பேஸ் டைம்.

உயிர்கள் எதுவுமே ஒரே போல படைக்கப் ப டவில்லை. ஒவ்வொரு உயிர் வகைக்கும் (Specie) வேறுபாடுகள்

உண்டு. மனிதரை உதாரணமாகக் கொண்டால் எல்லா மனிதருக்கு இடையிலே எத்தனை வேறுபாடுகள்?

கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா வைரஸ் முதல் யானை மற்றும் அனகொண்டா பாம்பு வரை எண்ணிலடங்காத உருவங்களில் , உயிர்கள் எத்தனை எத்தனையோ?

மனிதரின் தோற்றத்தில் தான் எத்தனை வேறுபடுகள்?

அதுமட்டுமே இல்லை , மனிதர்களின் சிந்தனையில் , ஆசைகளில் விருப்பு வெறுப்புகளில் , அறியும் கருவிகளின் தன்மைகளில் , அவற்றின் எண்ணிக்கைகளில் எவ்வளாவு வேறுபாடு?

ம்னிதரல்லா மற்ற உயிர்களைக் கவனித்தாலோ?

ஒரே ஒரு அறியும் கருவி மாத்திரமே கொண்ட உயிரினங்கள் முதலாக, இரண்டு மூன்று மற்றும் நான்கு அறியும் கருவிகள் கொண்ட **(Sensory Organs)** உயிர்கள் இருப்பது நமக்குத் தெரியும் . அவ்வாறு, உயிர்களை **தொல்காப்பியர்** காலத்திலே பிரித்தார்கள்.

நாம் கேட்டிராத ஒரு சில பரிமாணங்கள்.

மனிதன் இரண்டே பரிமாணங்களில் வாழ்வதற்கே படைக்கப்பட்டவன். நீளம் அகலம்.

இரண்டு பரிமாணங்களில் வாழ்ந்து வந்தாலும்

மூன்றாவது பரிமாணத்தில் (**ஆகாய விமானம்** , **விண்வெளிப் பயணம்** ஆகியவற்றில்) பெரிய சாதனைகளை செய்து வருகிறான்

நேரம் என்பது **நான்காவது பரிமாணமாக** விஞ்ஞானிகள் கருதிய காலம் உண்டு . நேரம் ஒரு பரிமாணமாக இருந்தால் , **வருங்காலம்–கடந்த காலம்** இரண்டிலும் பயணம் செய்யலாம்.

சித்தர்காள் என்று அறியப்பட்ட ஞானிகள் நேரம் என்னும் நான்காவது பரிமாணத்தில் சுலபமாக பயணம் செய்வதை சிலர் உணர்கிறோம் . இதை ஞானிகள் தங்கள் செயல் மூலம் தெரிவிக்க,குத்துமதிப்பாக நாமும் புரிந்து கொள்கிறோம்.

சித்தர்களை முக்காலமும் உணர்ந்தவர்களாகப் படித்திருக்கிறோம். இந்த வகை ஞானிகள் , ஒருவரைக் கண்டவுடன், அவர் யார்? எங்கிருந்து வருகிறார்? அடுத்து என்னென்ன செய்வார் என்பதை வினாடிகளில் உணர்வார்கள்.

இன்று, உயிர்களுக்கு, **ஸ்பேஸ்-டைம்** என்னும் நான்காம் பரிமாணம் இருப்பதை ஆன்மிக நூல்கள் பல கதைகளாகச் சொல்கின்றன. அதைப் புரிந்து கொண்டால் ஆன்மிகம் அறிவில் பாதிக்கு மேல் கற்றுவிட்டோம் எனலாம். ஸ்பேஸ்–டைம் என்பதன் முக்கியத்துவம்

என்ன?

மாயை தன் விஷமத்தைக் காட்டுவது இங்கிருந்து துவங்குகிறது. அடுத்துவரும் அத்தியாயத்தில் மாயையின் விளையாட்டைப் படிப்போம் . மாயையைப் புரிந்து கொள்ள ஸ்பேஸ் டைம் என்னும் ஒரு பரிமாணத்தை சுத்தமாக புரிந்து கொள்வது அவசியம் . அடுத்த அத்தியாயம் **ஸ்பேஸ்-டைம்** குறித்த விளக்கம் மற்றும் அதை விளக்கும் மூன்று புராணக் கதைகளைக் காண்போம்.

அத்தியாயம் 2

ஸ்பேஸ்-டைம் கதைகள்

கதை 1

யார் இந்த மாயா?

தேவி பாகவதம் அல்லது தேவி பாகவத புராணம் . உலகத்தை ஆளும் மாபெரும் **சக்தியை** விவரித்து விளக்கும் ஒரு காவியம்.

கீழை நாட்டு மதங்கள் சக்தியை சிவனின் துணைவியாகக் காண்கிறார்கள்.
சிறிய உ ருவம் கொண்ட உயிர் குறைந்த வாழ்னாளும் பெரிய் உருவம் கொண்ட உயிர்கள் அதிக வாழ்னாளும் கொண்டிருப்பதை காணலாம்.

இதில் வாசகர்களுக்கு **ஒரு ஸ்பேஸ் டைம்** என்னும் ஒரு பரிமாணத்தை விளக்க மூன்று கடைகாள் , முத்லாவது கதை.

நாரதர் ஒரு முனிவர் . அவர் ஒரு திரிலோக சன்சாரி . அதாவது அவர் மனிதர் வாழும் உலகத்திற்கும் கடவுள்கள் வாழும் உலகத்திற்கும் அடிக்கடி சென்று வருவதாக புராணங்கள் சொல்கின்றன.

ஒரு சமயம் , விஷ்ணு வசிக்கும் வைகுண்டத்தை அடைந்த நாரதர் , மாயைப் பற்றிய ரகசியத்தை தனக்கு விளக்குமாறு கேட்டுக் கொள்கிறார்.

(சாதாரண மனிதர் , தன் உலகத் திலிருந்து வேறு ஒரு உலகம் சென்றால் அந்த உலகத்தின் நேரத்தில் சிக்கிடுவார்).

பதிலாக, விஷ்ணு சொல்கிறார் , பிரபஞ்சம் எனது மாயையால் உருவாக்கப்பட்டது . இதை ஒப்புக்கொண்டவர்கள் என்னை அறிகிறார்கள்.

மாயை பற்றிய விளக்கத்தை வார்த்தையினால் விளக்குவதைவிட ஒரு செயல்மூலம் விளக்கம் தருகிறேன் என்கிறார்

இருவரும் விஷ்ணு வாழுமிடமான வைகுண்டத்திருந்து புறப்பட்டு, இருவரும் மானிடர் வாழும் நம் உலகத்திற்கு வருகிறார்கள்.

இங்கே இருவரும் பேசிக்கொண்டே நடக்கிறார்கள். இடம் ஒரு பாலைவனம்.

நான் மாயையை விளக்குவதற்கு முன்னால் எனக்கு குடிக்க தண் ணீர் கொண்டுவா என்று நாரதரிடம் சொல்கிறார்.

தண்ணீர் கொண்டுவரச்சென்ற வழியில் ஒரு அழகியைக் கண்டு தன்னை தன் மனத்தை அப்பெண்ணிடம் இழக்கிறார். தன்னை திருமணம் செய்து கொள்ள அந்த அழகியைக் கெஞ்சுகிறார். அவளும் சம்மதிக்கிறார்.

நாரதர் அவர்களுக்காக ஒரு வீடு கட்டுகிறார் . அவர்களுக்கு நிரைய குழந்தைகள் பிறக்கின்றன . மனைவி நாரதரை நேசிக்கிறாள் , குழந்தைகள் மகிழ்ச்சியைத் தருகின்றன . காலப்போக்கில், விஷ்ணு தன்னுடன் வந்ததையும் அவருக்காக தான் தண்ணீர் தேடி வந்ததையும் முற்றும் மறந்துவிட்டார்,

குழந்தைகள் வளர்ந்து அவர்களுக்கு திருமணமா கி பேரக் குழந்தைகளுடன். நாரதர் இனிதே வாழ்ந்து வந்தார்.

திடீரென்று ஒரு நாள்,

வானில் கார் மேகம் சூழ்ந்தது . மின்னல் இடியுடன் கூடிய மழை தொடர்ந்தது . வெள்ளம் பெருகி , வீடு மனைவி குழந்தைகள் அனைத்தையும் அடித்துச் சென்றது.

அதே வெள்ளம் நாரதரையும் விடவில்லை . அப்போது, யாரேனும் என்னைக் காப்பாறுங்களேன் என்று கத்துகிறார் நாரதர்.

அப்போது விஷ்ணுவின் கை நாரதரின் கையை பற்றிக்கொள்ள இருவரும் வைகுண்டத்தை அடைகிறார்கள்.

அப்போது விஷ்ணு நான் கேட்ட தண்ணீர் எங்கே என்று கேட்கிறார். என் குடும்பத்தையே இழந்து நிற்கும் என்னிடம் தண்ணீர் எ ங்கே என்று கேட்கிறாயே , இது நியாயமா எங்கிறார் நாரதர்.

இங்கே இருந்தே இவர்களின் பேச்சை சென்சார் செய்திடுவோம்.

விளக்கம்:

இருவரும் வைகுண்டத்திலிருந்து புறப்பட்டார்கள் . அப்பொழுது அவர்கள் தங்கள் உலகத்திற்கான வாழும் காலத்திலிருந்தார்கள். வைகுண்டத்திநன் ஒரு சில

வினாடிகள் நம் உலகத்தில் பல வருடங்களுக்கு நிகரானது என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

விஷ்ணு தன் வைகுண்ட **ஸ்பேஸ்-டைமில்** தங்கிவிட்டார். நாரதரோ **பூவுலகத்தின் நேரத்தில்** நழுவிவிட்டார்.

வைகுண்ட நேரத்தின் சில வினாடிகளில் பூவுலகத்தின் சுமார் எண்பது வருடங்களைக் கழித்துவிட்டார்.

இந்தக் கதை விளக்குவது:

⇒ பல (பதிநான்கு) உலகங்கள் உள்ளன . அவைகள் லாஜிகல் பிரிவுகள் . ஒன்றொடு ஒன்று பிரிக்க இயலாதவை.

⇒ ஒவ்வொன்றின் உயிர்களுக்கும் வாழும் காலமோ நூறுவயது.

⇒ ஒவ்வொரு உலகத்தின் நேரம் மற்ற உலகங்களிலிருந்து மாறுபடும்.

⇒ கீழே காணும் ஒரு மாணிக்கவா சகர் பாடலின் விளக்கம் வெவ்வேறு கடவுளர்கள் வாழும் உலகத்தின் நேர வித்யாசங்களை விக்குவதாக அமைந்துள்ளது.

கதை 2

(2) **மாணிக்கவாசகரும் ஸ்பேஸ் டைம் பரிமாணமும்**.

இப்போடது **மாணிக்கவாசகர்** பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

முதன் முதலில் இந்தப் பாடலைப் படித்தபோது ஒரு அதிர்ச்சி.

வரலாற்றில் படித்த **சைவ-வைஷ்ணவ** பிரச்சினை இப்படிப்பட்ட பாடல்கள் மூலம்தான் முளைத்ததோ என்று ஒரு சந்தேகம் ,

ஆன்மிக சம்பந்தமான பல புத்தகங்களைப் படித்த பிறகு இந்தப் பாடலின் பின்னால் ஆண்டவனைப் பற்றிய ஒரு அருமையான **அறிவியல் செய்தி** இருப்பது வெளி வந்தது.

கோடானு கோடி உயிர்வகைகள் இருந்தாலும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒரு பரிமாணம் (நீள -அகல–உயரம்) உண்டும். அந்த பரிமாணத்திற்கும், வாழும் காலத்திற்கும் ஒரு நெருங்கிய தொடர்பும் உண்டு.

இதை விளக்க அடி முடி தேடிய கதையும் . கீழே காணும் மாணிக்க வாசகர் அளித்த ஒரு விபரீதமா ன பாடலையும் இணத்துப் பார்க்க வேண்டும்.

அந்த மாணிக்கவாசர் பாடலின் வரிகள் கீழே

தரப்பட்டுள்ளது.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்;

ஆறு கோடி நாராயண ரங்கணே:

ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்;

ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே:

- மாணிக்கவாசகர்

இதிலிருந்து நாம் அடைய வேண்டிய செய்தி என்ன?:

இந்தப் பாடல் ஒரு கணக்குப் பாடம்.

ஒரு பிரமன் தன் (அண்டத்திலே) உலகத்தில் **100 ஆண்டுகள்** வாழ்ந்தபிறகு மடிந்த அதே நாளிலே பிரமர்களின் உலகத்திலே,ஒரு பிரமர் பிறக்கிறார்.

பின்னர் வாழ்ந்து **முடிந்து** – இப்படி– **ஒன்றன் பின் ஒன்றாக**, நூறு பிரமர்கள் பிறந்து–வாழ்ந்து–மடிந்த அதே காலத்தில் , ஆறே ஆறு நாராயணர்கள் பிறந்து–வாழ்ந்து-இறந்திருப்பார்கள்.

இதையே மாற்றி,இப்படியும் சொல்லலாம்.

நாராயணர்கள் தங்கள் உலகத்தில் ஆறு வயது அடைந்ததும், அதே நாளில் பிறந்த ஒரு பிரமன் , தன் உலகத்தில்,நூறு வயதை அடைந்திருப்பார்கள்.

(A) கடவுள்கள் எல்லோருக்கும் இறப்பிலிருந்து

விடுதலை இல்லை . (B) அனைவருக்கும் ஒரே வாழும் காலமும் இல்லை . இவை இரண்டும் இந்தப் பாடல் தரும் விளக்கம்.

கதை 3

(3) **பிரமரும் நாராயணரும் மற்றும் சிவனும் ஒரே உருவ அளவைக் கொண்டிருப்பார்களா**?

இந்த சந்தேகத்தை ஒரு மகான் என் றோ எங்கோ எழுப்பியிருக்கவேண்டும்,

நீளம் அகலம், **உயரம்** என்று மூன்று பரிமாணங்களைத் தவிர "**உருவஅளவு-வாழ்னாள்**" என்ற புதிய நான்காம் பரிமாணம் ஒன்றை உணரவேண்டும்.

.நம் உலகிலே , நம்மைச் சுற்றியும் உள்ள உயிர்களை அலசுவோம். நம்மை விட அதிக உருவ அளவுள்ள **யானையின்** வாழும் காலம் 100 ஐ விட மிக அதிகம்.

நம்மைவிட மிகக் குறைநத உருவம் கொண்ட நாய் பூனை முதலான உயிர்களின் வாழும் காலம் சுமார் பத்து வயதிற்கும் குறைவானவை.

உயிர்களின் அதிக பட்ச வாழும் காலதிற்கும் உருவ அளவுக்கும் (பரிமாணங்களுக்கும்) ஒரு இணைப்பு உள்ளது..

அதற்கு விடையாக ஒரு புராணக் கதை ஒன்று:

Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below

